# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW13

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் சிவானந்தம் | Caste | : |
| S/o.W/o.D/o. | : M.மணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 28.01.2025.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரசு நாமக்கல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 19.05.2018ம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அதே சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது சங்ககிரி காவல்நிலைய குற்ற எண்.196/2018 சட்டபிரிவு 302 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட

இறந்துபோன சின்னுசாமி, வயது 70, த/பெ.அய்யம்பெருமாள், 8/305, காளிப்பட்டி பிரிவுரோடு, வைகுந்தம் அஞ்சல், சங்ககிரி வட்டம், என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்களால் தலைமை காவலர் 1152– ரவிசந்திரன் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தினை பகல் 2.30 மணிக்கு பெற்று மேற்படி பிரேதத்தை பகல் 2.35 மணி அளவில் பிரேத பரிசோதனை கூடத்தில் வைத்து பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன். பிரேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி இடது கால்முட்டியின் மேல் ஒரு பழைய காயத்தழும்பு காணப்பட்டது. வலது காலின் முன்பகுதியில் பழைய தையலிடப்பட்ட காயத்தழும்பு காணப்பட்டது. மேற்படி பிரேதமானது உடல் முழுவதும் விறைத்து காணப்பட்டது. பிரேதம் நன்றாக பலமான ஊட்டச்சத்துடன் காணப்பட்டது. பிரேதத்தை ஆய்வு செய்தபோது பிரேதத்தின் கை மற்றும் கால் நகங்கள் cyanosis எனப்படும் நீலம் பாய்ந்து காணப்பட்டது. இரண்டு கண்களின் கருவிழிகளும் குழிந்து உலர்ந்து காணப்பட்டது. கருவிழியை சுற்றி உள்ள கண்பகுதிகள் சிவந்து காணப்பட்டது. இறப்பிற்கு பின்னான தோல் உரியும் படலம் ஆரம்பித்திருந்தது. மேலும் பிணக்கூராய்வை தொடர்ந்தபோது உடலின் மேலே 0.2 x 0.2 cm அளவிலான அருகருகே அமைந்த 2 கருஞ்சிவப்பிலான சிராய்ப்பு காயங்கள் மூக்கின் நுனிப்பகுதியில் காணப்பட்டது. இடது காதின் வெளிப்பகுதியில் பல அருகருகே அமைந்த அதே நிறத்திலான சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. மேலும் கழுத்து பகுதியை ஆராய்ந்தபோது 35 cm சுற்றளவிலும் 0.5 செ.மீ அகலத்திலும் தொடர்ச்சியாக இல்லாமல்

கழுத்தை சுற்றிய சிராய்ப்பு காயமானது, 8 செ.மீ அளவில் கழுத்தின் பின்பகுதியில் இடைவெளியுடன் காணப்பட்டது. அதை மேலும் ஆராய்ந்து பார்த்தபோது அந்த இடம் கருஞ்சிவப்பாக இருந்தது. முகவாய்க்கட்டையின் நடுப்பகுதியில் இருந்து 5 செ.மீ கீழாகவும் கழுத்திற்கு மேலே தொண்டை குழிப்பகுதியிலிருந்து 7 செ.மீ மேலாகவும், 6.5 செ.மீ நீளத்தில் தாடையில் வலது காதுக்கு கீழ்பகுதியிலும் இடது காதுக்கு கீழாகவும் 8 செ.மீ அளவில் மேற்குறிப்பிட்ட சுருக்கு காயம் அமைந்திருந்தது.

மேலும் மேற்குறிப்பிட்ட கழுத்தை சுற்றிய சிராய்ப்பு காயங்கள் ரத்தமில்லா பிணக்கூராய்வு என்று அழைக்கப்படும் பிண கூராய்வை உடலின் மற்ற பகுதிகளை ஆய்வு செய்து முடித்தபிறகு, ஆய்வு செய்தபோது மேற்குறிப்பிட்ட கழுத்தை சுற்றிய சுருக்கு காயத்தின் உட்பகுதியில் எவ்வித ரத்தக்கசிவும் இல்லாமல் வெளிறி காணப்பட்டது.

கழுத்து பகுதியில் உள்ள மிக முக்கிய எலும்புகளான ஹய்யாடு மற்றும் மற்ற கழுத்து பகுதியில் உள்ள மற்ற எழும்புகளும் கழுத்து பகுதிகளில் இருக்கும் முள் எலும்புகளும் உடையாமல் காணப்பட்டது. உணவுக்குழாய் சற்றே வீங்கியும் மேலும் கூராய்வு செய்து உட்பகுதியை ஆராய்ந்தபோது சில பாதி செரிக்கப்பட்ட உணவு துகள்களுடன் காணப்பட்டது. அதனுடைய மியூக்கோசா சிமெண்ட் நிறத்தில் காணப்பட்டது.

குரல்வளையை ஆய்வு செய்தபோது இயல்பாக காணப்பட்டது. கழுத்தை சுற்றி சி7 மற்றும் சி8 கழுத்தின் உள் எலும்புகளை சுற்றி இருக்கும் பகுதிகள் சற்றே சிவந்தும் வீங்கியும் காணப்பட்டது.

தலையை பிணக்கூராய்வு செய்தபோது மண்டை ஓட்டின் மேல்பகுதியிலோ மண்டை ஓடோ, எவ்விதத்திலும் சிவந்தும் உடையாமலும் காணப்பட்டது. மண்டை ஓட்டை நீக்கி பார்த்தபோது மண்டை ஓட்டின் கீழ்பகுதியில் உள்ள ஜவ்வு பகுதிகள் கிழியாமல் இயல்பாக இருந்தது. ஜவ்வு பகுதியை நீக்கி பார்க்கும்போது மூளையின் மேல்பகுதியில் எவ்வித ரத்தமோ ரத்தக்கட்டோ காணப்படவில்லை. மேலும் மூளையை கூராய்பு செய்தபோது ஜெல்லி போன்ற திரவமானது மூளையை சுற்றி காணப்பட்டது. அந்த ஜெல்லி பகுதியை நீக்கி பார்க்கும்போது மூளையின் மேல் உள்ள ரத்தக்குழாய்கள் வீங்காமல் இயல்பாக இருந்தது. மேலும் கூராய்வு செய்தபோது மூளையான்து பொதுவாகவே வீங்கி, சிவந்திருந்தது. மூளையை மேலும் பகுப்பாய்வு செய்தபோது மூளைக்குள் எவ்வித ரத்தக்கசிவும் ரத்ததிட்டுகளும் எவ்விடத்திலும் காண்ப்படவில்லை. மூளையை மொ்த்தமாக எடுத்து வெளியே வைத்து விட்டு மூளையின் அடிப்பகுதியை ஆய்வுசெய்தபோது மூளையின் அடிப்பகுதியிலோ, மண்டை ஓட்டின் எவ்விடத்திலோ எந்தவித உடைப்பும் காணப்படவில்லை.

மேலும் எனது பகுப்பாய்வை நெஞ்சுப்பகுதியில் தொடர்ந்தபோது 5,6,7 நெஞ்சு கூட்டெலும்புகள் நெஞ்சுகுழியின் நடுப்பகுதியில் வலது பக்கத்தில் உடைந்திருந்தது. மேலும் நெஞ்சு கூட்டெலும்பை பகுப்பாய்வு செய்தபோது தசைகள் சிவந்திருந்தது. நெஞ்சுக்கூட்டை பகுப்பாய்வு செய்து நீக்கி இடது நுரையீரல் பகுதியை பகுப்பாய்வு செய்தபோது இடது நுரையீரலானது மார்பு கூட்டெலும்புடன் ஒட்டியும் வீங்கியும் சிவந்தும் காணப்பட்டது. நுரையீரலை நீக்கி பகுப்பாய்வு செய்தபோது நுரையீரல்

சிவந்திருந்தது. வலது நுரையீரல் பகுதியும் மேல்கண்டவாறே காணப்பட்டது. நுரையீரலை நீக்கி விட்டு இதயத்தை பகுப்பாய்வு செய்தபோது இதயம் கல்போன்று இல்லாமல் flabby யாக இருந்தது. அந்த இதயத்தை சுற்றி இருக்கும் தசைப்பகுதியில் அதிகமான கொழுப்பு படிந்து காணப்பட்டது. கொரோனரி எனப்படும் இதயத்திற்கு ரத்தம் கொண்டு சேர்க்கும் ரத்தக்குழாய்கள் இதயத்தின் 2 பக்கமும் இயல்பாக இல்லாமல் கடினமாக காணப்பட்டது. அந்த கொரோனரிகளை பகுப்பாய்வு செய்தபோது அதன் உட்பகுதியில் கொழுப்பு படிவதால் ஏற்பட்ட இயல்புக்கு மாறான திட்டுகள் காணப்பட்டது. மேலும் இதயத்தை பகுப்பாய்வு செய்தபோது ரத்தத்தின் பெரும்தமனியின் உட்பகுதியில் கொழுப்பு படிவதால் ஏற்படும் கொழுப்பு திட்டுகள் காணப்பட்டது. மேலும் இதயத்தை பகுப்பாய்வு செய்தபோது இதயத்தின் உட்பகுதியில் 4 அறைகளிலும் எவ்வித ரத்தமும் காணப்படவில்லை. மேலும் இதய வால்வுகளும் மயோகார்டியம் எனப்படும் இதய தசையும் இயல்பாக காணப்பட்டது.

வயிற்றை பகுப்பாய்வு செய்தபோது வயிற்றின் உட்பகுதியில் இயல்புக்கு மாறான ரத்தமோ ரத்தம் கலந்த திரவமோ காணப்படாமல் வயிறும் வயிற்றின் குடல் பகுதியும் காற்று நிறைந்து இருந்தது. வயிற்றின் உட்பகுதியில் பகுப்பாய்வு செய்தபோது இறப்பிற்கு பின்னால் ஏற்படும் துர்நாற்றம் அடிக்கும் காற்றானது வெளியேறியது. மேலும் வயிற்றுக்குள் 150 கிராம் அளவிலான பாதி செரிமாணம் ஆன அரிசியும் சாம்பாரும் கலந்த உணவு இருந்தது. வயிற்றின் உட்புறம் சிவந்தும் வீங்கியும் காணப்பட்டது. சிறுகுடலை பகுப்பாய்வு செய்தபோது சிறுகுடல்

எவ்வித உணவுப்பொருளும் இல்லாமல் இயல்பாக இருந்தது.

கல்லீரல், இயல்பான அளவிலும் தனது கடினத்தன்மையை இழந்து சிவந்தும் காணப்பட்டது. அதை கூராய்வு செய்து பார்த்தபோது சிவந்து போய் இருந்தது. மண்ணீரல் இயல்பான அளவிலும் சிவந்தும் காணப்பட்டது. அதை பகுப்பாய்வு செய்தபோது சிவந்திருந்தது. வலது சிறுநீரகம் இயல்புக்கு மாறாக தனது கடின தன்மையை இழந்து சிவந்து காணப்பட்டது. இடது சிறுநீரகமும் அவ்வாறே காணப்பட்டது. 2 சிறுநீரகங்களை வெட்டி கூராய்வுசெய்தபோது உட்புறமாக சிவந்திருந்தது. சிறுநீர்ப்பையானது சிறுநீர் இல்லாமல் இயல்பாக காணப்பட்டது.

பிறப்புஉறுப்பு பகுதி இயல்பாக எவ்வித காயமும் இல்லாமல் காணப்பட்டது. மேலும் பிணக்கூராய்பு செய்து உடலின் மற்றபகுதிகளை ஆய்வு செய்தபோது உடலின் எந்த எலும்பும் உடையாமலும் முதுகெலும்புகள் உடையாமலும் இயல்பாக இருந்தது. உடலின் உட்பகுதிகளை சேகரித்து ரசாயன பரிசோதனைக்காக சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பிணக்கூராய்வு அறிக்கையை ரசாயன பரிசோதனை அறிக்கை வந்தபிறகே இறுதி கூராய்வு அறிக்கையை வழங்க முடியும் என்று குறிப்பிட்டு ஆரம்ப கட்ட பிண கூராய்வு அறிக்கையை வழங்கினேன். மேலும், மேற்படி பிண கூராய்வு செய்யப்பட்ட பிரேதமானது இறந்து 24 மணி முதல் 36 மணி நேரங்கள் வரை இருக்கலாம் என்று குறிப்பிட்டு பிண கூராய்வு அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய பிண கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.

வட்டார தடய அறிவியில் ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருந்து அறிக்கை எண்.SLM/TOX.H/754/18 DATE 5/6/2018 என்ற அறிக்கையை பெற்று அனுப்பப்பட்ட ஆய்வு மாதிரிகளில் மதுவோ, வேறு விசப்பொருளோ கலக்கப்படவில்லை என்று இருந்ததால் எனது இறுதி அறிக்கையாக பிரேத பரிசோதனை செய்யப்பட்ட சின்னுசாமி, வயது 70, த/பெ. அய்யம்பெருமாள் என்பவர் கழுத்தை சுருக்கு கயிற்றால் இறுக்கி ஏற்பட்ட மூச்சு திணறலாலும் அதன் விளைவுகளாலும் உடனடியாக இறப்பு ஏற்பட்டிருக்க கூடும் என்று இறுதி அறிக்கை வழங்கினேன். பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட ஆய்வின் அறிக்கை அ.சாஆ.7 ஆகும். நான் வழங்கிய இறுதி அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.